Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 59/2024 PW-1**

Name : ஷமீம்
Father / Husband name : தெய்வசிகாமணி
Village : திண்டிவனம்
Age : 29
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 26.09.2025

Accused present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது நகைக்கடையில் மேனேஜராக தற்காலிக வேலை செய்கிறேன். சாட்சி நபியகம் எனது அப்பா. சாட்சி அலிமாபி எனது அம்மா. சாட்சிகள் அப்துல்அஜீஸ், ஜான்பாஷா, மமுதாபி, பஷீர், இன்பவள்ளி ஆகியோர்கள் எனது ஊரிலிருப்பவர்கள். ஆஜர் எதிரி எனது கணவர். 2018 ம் வருடம் நான் M.Sc, படிப்பு முடித்துவிட்டு திண்டிவனம் கமிட்டி பக்கத்திலிருக்கும் FDDI என்ற நிறுவனத்தில் பயிற்சி எடுப்பபதற்காக எனது ஊரிலிருந்து திண்டிவனத்திற்கு ஆர்எம்எஸ் என்ற பேருந்தில் தினமும் காலை 10 மணிக்கு நான் வருவேன். ஆஜர் எதிரி மேற்படி பேருந்தில் ஓட்டுநராக பணிபுரிந்தார். நான் வரப்போகஇருக்கும்போது எதிரி என்னை பற்றி விசாரித்துவிட்டு என்னிடம் அவர் பேச ஆரம்பித்தார்.

2. நானும் அவருடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள் எனது போன் நெம்பரை வாங்கி என்னிடம் போன் செய்து என்னை காதிலிப்பதாக சொன்னார். அதற்கு நான் அவர் வேறு மதத்தை சேர்ந்தவர் என்பதால் வேண்டாம் என்று சொன்னேன். அவர் மீண்டும் என்னை காதலிப்பதாக தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார். எதிரி காதிலிக்க மறுத்தாள் எந்த எல்லைக்கும் செல்வேன் என்றும், என்னை கடத்திக்கொண்டு செல்வதகா சொன்னார். நான்

அவரிடம் மீண்டும் சொல்லியபோது அவர் என்னை திருமணம் செய்துகொள்வதாக நம்பிக்கை கொடுத்தார். நான் மேற்படி FDDI என்ற நிறுவனத்தில் பயிற்சி முடித்துவிட்டு திண்டிவனத்திலிருக்கும் ஊக்கில்ரூபின் என்ற நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்த பணிசெய்துகொண்டிருந்தேன். சில சமயங்களில் பேருந்து வரவில்லை என்றால் ஆஜர் என்னை அவரின் பைக்கில் அழைத்துக்கொண்டு செல்வார். எங்களுக்குள் பழக்கம் அதிகமானதால் நிரைய கடைகளுக்கு அழைத்துசெல்வார். பின்னர் 23.01.2019 அன்று எதிரியின் குலதெய்வக்கோவிலான நெய்குப்பியிலிருக்கும் முத்துமாரியம்மன் கோவிலுக்கு அழைத்துசென்று பேசிக்கொண்டிருந்தார், பின்னர் அந்த கோவிலில் எனக்கு தாலிக்கட்டி திருமணம் செய்துகொண்டார். நான் அவரிடம் ஏன் திடீரென்று திருமணம் செய்துகொண்டிர்கள் என்று கேட்டதற்கு, நான் யாரையும் திருமணம் செய்துகொள்ளக்கூடாது சொன்னார்.

3. எதிரியின் 2வது தம்பி வேறு மதத்திலிருந்து பெண்ணை திருமணம் செய்துகொண்டதால் அவரை குடும்பத்திலிருந்து ஒதுக்கி வைத்ததால் தற்போது என்னை அவருடன் அழைத்துசெல்ல முடியாததால் என்னை எனது வீட்டிலிருக்கமாறு சொன்னார். எதிரி எனது வீட்டில் அவர் என்னை பதிவு திருமணம் செய்துகொண்டதாக எனது பெற்றோரிடம் சொல்லிவிட்டார். பின்னர் எதிரி எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்துபோக இருந்தார். அப்போது நானும் எதிரியும் கணவன் மனைவியாக இருந்தோம். எதிரி அடிக்கடி வந்துபோவதால் பக்கத்திலிருப்பவர்கள் தப்பாக பேசினார்கள். அதனால் எதிரிக்கும் பக்கத்திலிருப்பவர்களுக்கும் சண்டை ஏற்பட்டதால் நான் அவரின் வீட்டிற்கு உடனடியாக அழைத்துசெல்லும்படி சொன்னேன். அதற்கு எதிரி அவரின் வீட்டில் பேசிவிட்டு அழைத்துசெல்வதாக சொன்னார். ஆனால் எதிரி அவரின் வீட்டில் பேசுவதுபோல் தெரியவில்லை. சுமார் 6 மாதத்திற்கு பின்னர் எதிரி அவரின் அம்மா ஒத்துக்கொள்ளவில்லை என்பதால் நமக்குள் நடந்த திருமணத்தை நீ மறந்துவிட்டு வேறு ஒருவரை திருமணம் செய்துகொள், நானும் வேறு ஒரு

பெண்ணை திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொல்லி அவரின் போன் நெம்பரை மாற்றிவிட்டார்.

4. அதன்பின்னர் நான் எதிரியின் கடைசி தம்பியான புரட்சிமணி என்பவரின் போன் நெம்பரை வாங்கிபேசினேன். அதற்கு புரட்சிமணி நடந்த விவரங்கள் அவருக்கு தெரியும் என்று சொன்னார். நான் புரட்சிமணியின் போனிலிருந்து எதிரியிடம் பேசியபோது எதிரி அந்தசமயம் ஊரில் திருவிழா நடப்பதால் என்னிடம் பேசமுடியாது என்று சொன்னார். பின்னர் 2 நாட்கள் கழித்து எதிரியின் தம்பி அன்புமணி எனக்கு போன் செய்து என்னை அவர் வீட்டிற்கு வருவதற்கு ஒருநாளும் அனுமதிக்கமாட்டோம் என்று மிரட்டும்படி பேசிவிட்டு போனை வைத்துவிட்டார். அதன்பின்னர் என்னை திண்டிவனம் மகளிர் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லிவிட்டு எதிரியின் தரப்பிலிருந்து யாரும் வராததால் நான் சென்னைக்கு சென்றுவிட்டேன். அதன்பின்னர் எதிரியின் பழைய போன் நெம்பருக்கு போன் செய்து மீண்டும் என்னை அழைத்துச்செல்வதாக பேச பேச எதிரி தரப்பிலிருந்து ஒவ்வொருவராக எல்லாரும் போன் செய்து மிரட்டினார்கள்.

5. 2019 ம் நவம்பர் / டிசம்பர் மாதத்தில் ஒருநாள் எதிரியின் ஊரான வெண்மணியாத்தூருக்கு சென்று எதிரியின் வீட்டில் கேட்கலாம் என்று சென்றேன். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது எதிரியின் தம்பி புரட்சி மணி அங்கிருந்தர், அவர் எதிரிக்கு போன் செய்து வீட்டிற்கு வரும்படி சொன்னார். எதிரி வந்ததும் என்னை கேட்காமல் இங்கு எதற்காக வந்தாய் என்று கேட்டு அடிக்கவந்தார், அப்போது புரட்சி மணி மற்றும் எதிரியின் அம்மா வளர்மதி ஆகியோர்கள் வீட்டினுள் இருந்து வந்து என்னை தேவிடியா இங்கு எதற்காக வந்தாய் என்று எல்லோல் முன்னாடியும் அசிங்கமாக கேட்டார். நான் என்னை யார் மிரட்டியது என்று தெரிந்துகொள்ள வந்தேன் என்று சொன்னபோது எதிரி வளர்மதி நான் தான் உன்னை மிரட்டியதாக சொல்லி அடிக்கவந்தார், நான் கீழே விழுந்துவிட்டேன். அதனால் நான் மனம் உடைந்து வீட்டிற்கு சென்று மருந்து

குடித்துவிட்டேன். என்னை எனது அம்மாவும், பக்கத்து வீட்டிலிருக்கும் ஒருவரும் என்னை காப்பாற்றி திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள்.

6. நான் மருத்துவமனையிலிருக்கும்போது புரட்சிமணி பார்த்துவிட்டு அவர் வீட்டில் சொல்லி எனது வீட்டில் வந்து பேசுவதாக சொன்னார்கள். நான் போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தபோது நான் நடந்த சம்பவத்தை சொல்லவில்லை, ஆனால் நான் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு சென்ற பிறகும் எதிரிகள் தரப்பிலிருந்து யாரும் வீட்டிற்கு வந்து பேசவில்லை. நான் மருத்துவமனையிலிருந்து வந்த 3வது நாள் மீண்டும் எதிரியின் வீட்டிற்கு செல்லலாம் என்று இருந்த சமயத்தில் எனது அண்ணனின் நண்பராக அரிகிருஷ்ணன், தனுஷ் ஆகியோர்கள் தனியாக வீட்டிற்கு செல்லவேண்டாம் என்று சொன்னார்கள். எதிரியின் ஊரிலிருக்கும் முக்கியஸ்தர் ஆறுமுகம் என்பவரிடம் சொல்லி பஞ்சாயத்து பேசலாம் என்று முடிவு செய்து எதிரியின் ஊரிலிருக்கும் தாமரைக்குளத்திற்கு நானும், எனது அம்மா, அரிகிருஷ்ணன், தனுஷ் ஆகியோர்கள் எங்கள் தரப்பிலும், எதிரி தரப்பில் எதிரியும், ஆறுமுகம், முனியப்பன் மற்றும் ஒரு நபர்களும் வந்தார்கள்.

7. அப்போது எதிரி பஞ்சாயத்தின்போது நடந்த சம்பவங்களை ஒப்புக்கொண்டு பஞ்சாயத்து முடிவுக்குவரும் சமயத்தில் ஆறுமுகம் பஞ்சாயத்தை களைத்து எதிரிகளை அனுப்பிவிட்டார். நான் ஆறுமுகத்திடம் பஞ்சாயத்து பேச வந்த நீங்களே பஞ்சாயத்தை களைத்துவிட்டீர்களா, நான் இதற்கு மேல் உயிரோடு இருக்கமாட்டேன் என்று சொன்னதற்கு அதற்கு ஆறுமுகம் இந்த குளத்திலே விழுந்து சாவு என்று சொல்லிவிட்டு சென்றார். பின்னர் நான் எதிரிக்குபோன் செய்து பஞ்சாயத்தில் நடந்த சம்பவம் கேட்டபோது எதிரி எந்த பதிலும் சொல்லாததால் நான் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்கலாம் என்று போனேன். அன்றையதினம் எதிரி வீட்டில் இல்லை. 09.06.2020 அன்று மாலை மாலை 5, 5.30 மணியளவில் சமத்துவபுரத்திலிருக்கும் எனது அண்ணனின் வீட்டு

வாசலில் உட்கார்ந்திருந்தபோது எதிரியும் அவரின் தம்பி புரட்சிமணியும் வந்து எதிரி காலால் எட்டி என்னை உதைத்தார். பின்னர் அவரின் தம்பியும் என்னை அடித்தார். சத்தம் கேட்டு வீட்டிலுள் இருந்த அம்மா, தங்கை வந்தபிறகு எங்கள் மூவரையும் எதிரி மற்றும் புரட்சிமணியும் அடித்துவிட்டார்கள்.

8. பின்னர் எதிரி எனது கழுத்திலிருந்த தாலியை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார். தகவல் தெரிந்து வீட்டிற்கு வந்த அரிகிருஷ்ணன் என்னையும், அம்மாவையும் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று நாங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். ரோசனை காவல் நிலையத்தில் நடந்த சம்பவம் குறித்து புகார் கொடுத்து அதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் என்னையும் எதிரி தரப்பிலும் அழைத்து விசாரித்தபோது எதிரி அவரது தப்பை உணர்ந்து கடிதம் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தார். அதனால் நான் எனது புகார் மீது நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று வாபஸ் வாங்கினேன். அதன்பின்னர் எதிரி வேறு ஒரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் அந்த பெண்ணை 2வதாக திருமணம் செய்துகொள்வதாக சொன்னார். அதனால் நான் மிகவும் மனவேதனையாக இருந்ததால் மீண்டும் நான் எதிரியின் ஊருக்கு சென்று அவரிடம் பேசலாம் என்று சென்றபோது அவர் வீட்டில் இல்லாததால் அவருக்கு போன் செய்தபோது அந்த போனில் வேறுஒரு பெண்ணை என்னை அசிங்கமாக பேசி திட்டினார்.

9. பின்னர் எதிரியின் ஊரிலிருக்கும் ஜோதிபிரகாசம் என்ற முன்னாள கவுன்சிலர் தாமரைக்குளத்தில் மீண்டும் என்னையும் எதிரியையும் அழைத்து பஞ்சாயத்து பேசினார். ஆனால் எதிரி பஞ்சாயத்துக்கு கட்டுப்படாமல் என்னை காலால் எட்டி உதைக்கவந்ததால் பஞ்சாயத்து நடக்கவில்லை. பின்னர் மேற்படி ஜோதிபிரகாசம் எனது அம்மாவிடம் போனில் உனது மகளுக்கு செட்டில்மன்ட் வாங்கிகொள்ளுமாறு சொன்னார். நான் செஞ்சி பேருந்து நிறுத்ததில் நின்றிருந்தபோது எதிரி வந்து செட்டில்மன்ட் வாங்கிக்கொள்ளும்படி சொன்னார்.

நான் அதற்கு மறுத்து பேசியபோது பேருந்து நிலையத்தில் என்னை செருப்பால் அடித்துவிட்டார். பின்னர் நான் எதிரியிடம் அதுப்பற்றி கேட்டபோது எனது ஊருக்கு வந்து பேசுவதாக சொல்லி வீட்டிற்கு வந்து எனது அம்மா, அப்பாவையும் அடித்துவிட்டார். பின்னர் எதிரி எனது அண்ணன் வீட்டிற்கு சென்று எனது அண்ணியையும் அடித்துவிட்டார். அதன்பின்னர் நான் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து எதிரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

10. அதன்பின்னர் நான் எனக்கும் எதிரிக்கும் நடந்த திருமணத்தை அவர் ஊரில் பொதுவில் வைத்து சொல்லிவிடுவேன் என்று சொல்லியதற்கு அதற்கு எதிரி தேர்தலில் நிற்பதால் ஊரில் இதுபற்றி சொன்னால் யாரும் ஓட்டுப்போடமாட்டார் என்று சொல்லி 3 மாதம் பொறுத்துக்கொள்ளுமாறு சொன்னார். எதிரி அவர் சொன்னதுபோல் நடந்துகொள்ளாமல் 04.07.2022 அன்று வேறுஒரு பெண்ணான சூளைமேட்டை சேர்ந்த சுமித்ரா என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டதால் திண்டிவனம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரி, எதிரியின் அம்மா, தம்பிகள் புரட்சிமணி, அன்புமணி ஆகியோர்கள் மீது நான் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எஸ்பி அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது. **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கும் எதிரிக்கும் எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் 2018, 2019 லிருந்து பழக்கம். எதிரியின் மீது இந்த வழக்கு இல்லாமல் வெள்ளிமேடுபேட்டை, ரோசனை, திண்டிவனம் காவல் நிலையங்களில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வெள்ளிமேடுபேட்டை, திண்டிவனம் காவல் நிலையங்களில் புகார் கொடுத்த தேதி தெரியுமா என்றால் 10.06.2020. வெள்ளிமேடுபேட்டை, ரோசனை,

திண்டிவனம் காவல் நிலையங்களில் உள்ள அதிகாரிகளுக்கும் எனக்கும் தனிப்பட்ட பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை, இந்த வழக்கு தவிர நான் காவல் நிலையம் சென்றதில்லை. மேற்படி வழக்குகளில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் முஸ்லிம் பெண் என்றால் சரிதான். எதிரி இந்து மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். மற்ற மதத்தில் பின்பற்றப்படும் பிறப்பு, இறப்பு முறைகள், வழக்கங்கள் தெரியுமா என்றால் தெரியும்.

2. முத்துமாரியம்மன்கோவில் எந்த ஊரில் உள்ளது என்றால் நெய்குப்பி. எங்களுக்கு நடந்த திருமணத்தில் யார் யார் கலந்துகொண்டார்கள் என்றால் எனது தரப்பில் யாரும் இல்லை, அந்த திருமணம் பற்றி எனக்கு தெரியாது, எதிரி தரப்பில் யாரும் இல்லை, கோவிலில் ஆட்கள் இருந்தார்கள். திருமணம் எந்த மதப்படி நடந்தது என்றால் இந்துமுறைப்படி நடந்தது. திருமணத்திற்கு அக்னி வளர்த்தார்களா என்றால் இல்லை, எதிரி திடீரென தாலிக்கட்டினார். திருமணத்திற்கு பிறகு நாங்கள் எங்கு சென்றோம் என்றால் எதிரி என்னை எனது வீட்டில்விட்டு சென்றுவிட்டார். 23.01.2019 தேதிக்கு பின்னர் வெள்ளிமேடுபேட்டையில் புகார் கொடுத்தேனா அல்லது முன்னரே கொடுத்தேனா என்றால் பின்னர் கொடுத்தேன். எனது ஊருக்கு செல்ல வந்தவாசி ரோடு, பாமூண்டி, ஷம்பஸ் வழியாக செல்லாம் என்றால் சரிதான். நான் வழக்கமாக ஷாம்பஸ்சில் செல்வேன் என்றால் சரிதான். எதிரி மேற்படி பேருந்தை ஓட்டினார் என்றால் சரிதான்.

3. திருமணத்திற்கு பிறகு நாங்கள் தனிமையில் சந்தித்தது பற்றி யாராவது சாட்சியம் அளிப்பாரா என்றால் அளிப்பார்கள், அவர்கள் தற்போது வேறு இடத்திற்கு சென்றுவிட்டார்கள். போலிசார் விசாரணையின்போது நான் மருந்து சாப்பிட்ட விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல, காவலர் பிரேமாவிடம் சொன்னேன். போலிசார் விசாரணையில் தாமரைக்குளம் பஞ்சாயத்து, ஆறுமுகம் செய்த பஞ்சாயத்து, ஜோதிபிரகாசம் செய்த பஞ்சாயத்து

பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரி அழைத்து அண்ணன் வீட்டிற்கு சென்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை எட்டி உதைத்த விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஒரு தங்கை உள்ளார். ஊஷ்யாம்பஸ்சில் நான் பயணம்செய்தபோது நட்பு ரீதியகா உள்ள பழக்கத்தை ஒருதலைபட்சமாக காதலித்து பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த வாக்குறுதியும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**